செ.வெ.எண்: 62 / ஜீன் / 2021 நாள்: 16.06.2021

**திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்களால் திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களைச் சார்ந்த துறை அலுவலர்களுடனான உணவுப் பொருள் மற்றும் பொது விநியோகம், நெல் கொள்முதல் தொடர்பான ஆய்வுக் கூட்டம், மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.எஸ்.இரகுபதி அவர்கள், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் முன்னிலையில் இன்று (16.06.2021) நடைபெற்றது.**

-------

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்களால் திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களைச் சார்ந்த துறை அலுவலர்களுடனான உணவுப் பொருள் மற்றும் பொது விநியோகம், நெல் கொள்முதல் தொடர்பான ஆய்வுக் கூட்டம், மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.எஸ்.இரகுபதி அவர்கள், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் முன்னிலையில் இன்று (16.06.2021) நடைபெற்றது.

இந்த ஆய்வின் போது துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டது. அப்போது மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:
உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள மனுக்களை உடனடியாக நடவடிக்கை எடுத்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

கொரோனா தடுப்பு விதிமுறைகளை பின்பற்றி இரண்டாம் தவணையாக 2 ஆயிரம் ரூபாய் மற்றும் 14 பொருட்கள் அடங்கிய மளிகை பொருட்கள் தொகுப்பு பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி சென்றடையும்படி பணியாற்றிட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்கள். பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அனைத்து பொருட்களும் தரமான பொருட்களாக வழங்குவதற்கு அறிவுரைகள் வழங்கினார்கள்.

மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் விவசாயிகள் கோரும் பட்சத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை கட்டாயமாக திறக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு தேவையான தளவாடப் பொருட்களை தொலைநோக்கு பார்வையுடன் கொள்முதல் செய்ய தயார் நிலையில் வைத்திட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்கள்.

திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களை சார்ந்த தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக ஊழியர்கள், கூட்டுறவுத் துறை ஊழியர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர்கள், உணவுப் பொருள் கடத்தல் தடுப்பு பிரிவு காவல் துறை ஆகியோர் அனைவரும் ஒருங்கிணைந்து ஒரே பணியினை செய்கிறோம் என்ற உணர்வோடு பணியாற்றிட மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், கூட்டுறவு உணவுப்பொருள் மற்றும் நுகர்பொருள் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.நசிமுதீன்,இ.ஆ.ப., உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையர் திரு.ஆர்.ஆனந்தகுமார்,இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக மேலாண்மை இயக்குநர் திரு.வி.ராஜாராமன்,இ.ஆ.ப., தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு.ஏ.சிவஞானம்,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.மு.பழனியாண்டி, முன்னாள் துணைமேயர் திரு.அன்பழகன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு:

உதவி இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி.